1978 மார்ச் 22]

உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த விதிகள் பொதுவாக அந்த பாலாறுபாசனப்பகுதிகளைப் பொறுத்தவரையில் தேவையானது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் அதே நேரத்தில் எந்த அளவிற்கு எத்தனை பேர்களுடைய மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

மீனவர்களுக்கு இயந்திரப் படகுகள் வழங்கல்.

657 வினா— திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை* அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976–77-ல் முப்பத்தொரு இலட்ச ரூபாய்க்கு மீன்பிடி இயந்திரப் படகுகள் கட்டி, தவணைக் கொள்முதல் முறையில் மீனவர்களுக்கு விற்பனை செய்வதற்காக கடன்கள் வழங்கப் பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டத்திற்கு, யார் யாருக்கு வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) மீனவர்களுக்கு 202 படகுகள் 1976–77-ல் தவணைக் கொள்முதல் முறையில் வழங்கப்பட்டன. மீனவர்கள் ஏற்றுக் கொண்ட 5 சதவீதத் தொகை போக அதில் மீதம் 95 சதவீதத் தொகையான ரூ. 2,41,59,340.33-க்குக் கடன் வழங்கப் பட்டுள்ளது.

(ஆ) சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாநில முழுதும் விசைப்படகு பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல்* அவையின் முன் வைக்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விசைப் படகுகளை இனி வருங்காலத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அவர்களுக்கே அளிக்கப்படும் என்ற கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதா ? அப்படி யென்றால் வருங்காலத்தில் அதை அமல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, அரசின் வருங்காலத் திட்டம், முதலில் மீனவர் கூட்டுறவு சங்கங்களை சீரமைத்து, அப்படி சீரமைக்கப்பட்ட பின்னாலே மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக மீனவர் களுக்கு விசைப்படகுகள் வழங்குவது பற்றி இந்த அரசு நிச்சய மாகப் பரிசீலிக்கும்.

---

*[703 ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

திரு. எம். வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, மீன்பிடி இயந்திரப்படகுகள் கட்டி தவணைக்கொள்முதல் முறையில் மீனவர்கள் அல்லாத தனி நபர் குத்தகைக்காரர்களுக்கு விற்பனை செய்ய கடன் வழங்கப்பட்டதா? அப்படியென்றால் எந்த அடிப்படையிலே வழங்கப்பட்டது? அவர்கள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரமான குறிப்புகள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் சேகரித்துத் தருகிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சமீபத்தில் ஜப்பானுக்குச் சென்றபொழுது மீனவர்களுக்கு உதவி செய்ய ஜப்பான் மீன் பிடி கிரேஸின் என்ஜின்களை இறக்குமதி செய்ய வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி இறக்குமதி செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசின் அனுமதியோடு ஜப்பானிலே 'யமாஹா' என்ஜின் நிறுவனத்திலிருந்து தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குத் தேவையான எஞ்சின்களை வாங்குவதற்குண்டான ஒப்பந்தம்பற்றி நமது அரசு தீவிரமாகப் பரிசீலிக்கிறது. 200 எஞ்சின்களை வரவழைப்பதற்கு மத்திய அரசின் அனுமதியை இந்த அரசு பெறவிருக்கிறது.

(முற்பகல் 9—30)

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற இந்த விசைப்படகுகள் கூட்டுறவு முறையில் கடன் மூலமாக வழங்கப்படுகின்றது. அந்தக் கடன் தீருவதற்கு முன்னால் அந்த விசைப் படகுகளை அவர்கள் வேறு நபருக்கு விற்பனை செய்ய உரிமை உண்டா? இல்லையெனில், விற்பனை செய்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, விற்பனை செய்வதற்கு அவர்களுக்கு நிச்சயமாக உரிமையில்லை. அப்படி விற்பனை செய்பவர்களைக் கண்டு பிடித்து அவர்களிடமிருந்து அந்தப் படகுகளை அரசாங்கமே அபகரித்துக் கொள்வதற்குச் சட்டங்களை கொண்டு வரலாமா என்று இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, மீனவர்களுக்கு இயந்திரப் படகு வழங்கும் திட்டத்தில் மீன் பிடிப்பதையே முழுவதும் தொழிலாகக் கொண்டவர்களுக்கு இயந்திரப்படகு வழங்கப்படுமா? மீன் பிடிப்பதை தொழிலாகக் கொண்டில்லாதவர்களுக்கு இயந்திரப் படகு கொடுப்பதை இந்த அரசு தடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : வருங்காலத்தில் இந்த முறை நிச்சயமாகக் கையாளப்படும்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே மண்டபத்தில் இந்தோ நார்வீஜியன் பிராஜக்ட் அடிப்படையில் விசைப்படகுகள் தயாரிக்கப்படுகின்றன. இப்பொழுது திடீரென்று ஜப்பானிடம் ஒப்பந்தம் செய்யவேண்டிய அவசியம் என்ன வந்தது? ஏன் நார்வேயிலேயே வாங்கப்பட முடியாதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள், அவர்கள் படகுகளைத்தான் செய்கிறார்கள் என்று. நாம் வாங்குவது படகுகளை ஓட்டுவதற்கான இயந்திரங்கள், 'இன்ஜின்கள்'. ஜப்பானில் தயாரிக்கப்படுகின்ற இன்ஜின்களை மண்ணெண்ணெயிலே ஓட்டமுடிகிறது. ஆகவே மீனவர்களுக்கு மிகக் குறைந்த செலவிலேயே இந்தத் தொழிலிலே ஈடுபட வாய்ப்பும் வசதியும் இருக்கிற காரணத்தாலேதான் ஜப்பானிலே வாங்க முடிவெடுத்திருக்கிறோம்.

திரு. சீ.மு. வாசன் : தலைவரவர்களே, மீன் பிடிப்போர் சங்கங்களில், மீன்பிடி தொழிலில் இல்லாதவர்கள் தலைவராக இருப்பதை இந்த அரசு அனுமதிக்காமலிருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இப்பேர்ப்பட்ட தவறுகளைத் தடுப்பதற்கு இந்த அரசு கூடிய விரைவில் சட்டம் கொண்டு வர இருக்கிறது.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, சமீபத்தில் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் ஜப்பான் சென்று வந்தார். அங்கேயும் மீன் பிடி படகுகளுக்கு இன்ஜின்கள் தயாரிக்கப்படுகின்றன. அதைப் போல் நம்முடைய நாட்டிலேயும் தயாரிக்கப்படுகிறது. அந்த இரண்டு இன்ஜின்களுக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? இங்கே தயாரிக்கப்படுவதைவிட, அங்கே தயாரிக்கப்படுவது தரம் உயர்ந்ததா? இரண்டுக்கும் வித்தியாசம் என்ன என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்தியாவிலே அகமதாபாத்திலுள்ள ஒரு நிறுவனம் இத்தாலிய நாட்டு தனிப்பட்ட நிறுவனத்தினுடைய கூட்டோடு அங்கே இயந்திரம் செய்கிற தொழிற்சாலையை நடத்தி வருகிறார்கள். ஜப்பானிலிருந்து இயந்திரம் வாங்கப்போவது பற்றிய செய்தியைப் பத்திரிகைகளிலே பார்த்து அறிந்தவுடன், நேற்றுகூட அவர்கள் வந்து என்னிடம் பேசினார்கள். துரதிருஷ்டவசமாக, அவர்களுடைய இயந்திரம் பெட்ரோலிலே இயங்குவது என்பதோடு, ஜப்பான் இயந்திர விலையை விட அதிகமான விலையாக இருக்கிறது என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.